JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| MC.No. | 05/2023 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-1- தேவகி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 18.04.2026 | | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது கணவரை விட்டு சென்ற பின்பு அவர் அவரது பெற்றோருடன் தான் தங்கி சாப்பிட்டு வருகிறார் என்றால். அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது கணவருடன் ஒன்றாக வசித்து வந்தபோது அவரது சம்பளத்தில் எவ்வளவு பணம் பிடிக்கிறார்கள் எவ்வளவு வெளிக் கடன்கள் செலுத்தி வருகிறார் என்கின்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர் வீடு சம்பந்தமாக லோன் கட்டுவது மட்டும் எனக்கு தெரியும்.

நாங்கள் சொந்தமாக வாங்கிய வீட்டை ரூ.8,000/- எதிர்மனுதாரர் வாடகைக்கு விட்டுள்ளார் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், ரூ.8,000/- க்கு வாடகைக்கு விடவில்லை, ரூ.10,500/- க்கு வாடகைக்கு விடப்பட்டு அந்த பணத்தை நான் பெற்று அப்போது நாங்கள் தங்கியிருந்த வாடகை வீட்டிற்கு வாடகை செலுத்தி வந்தேன். நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி வீட்டில் ரூ.8,000/- தான் வாடகை வருகிறது என்றாலும், நான் வழக்கிற்காக ரூ.10,500/-வாடகை வந்தது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி ரூ.10, 500/- வாடகைக்கு விட்டேன் என்பதை நிரூபிக்க வாடகைக்கு கொடுத்த நபரை நான் இந்த நீதிமன்றத்தில் விசாரிக்க உள்ளேன் என்றால், நான் எனது தரப்பு சாட்சியாக விசாரிக்கவில்லை.

நான் எனது மனுவில் கூறியுள்ளபடி எனது கணவர் வீட்டு செலவிற்கு பணம் கொடுப்பதில்லை என்றும் மது பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார் என்றும் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், எனது கணவர் எனது பெற்றோர் வீட்டிற்கு செல்ல சம்மதித்த பிறகு நான் எனது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 17:18:04 +0530

பெற்றோர் வீட்டுக்கு சென்று வந்தபோது எனது நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டு, நான் எனது கணவரிடமிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்பதற்காக அவர் வீட்டிற்கு பணம் தருவதில்லை என்றும் மது பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளார் என்றும் பொய்யாக கூறி எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

எனது பெற்றோரின் தூண்டுதலின் காரணமாக எனது கணவரின் பெயரில் உள்ள சொத்துக்கள் மற்றும் அவரது பெற்றோர் பெயரில் உள்ள சொத்துக்களை பறிப்பதற்காக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்றால், சரியல்ல. எனக்கு எந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால், கொளத்தூர் கிளை, இந்தியன் வங்கியில் உள்ளது நான் எனது கணவர் மீது இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு எனது கணவர் எனது மகளுக்கு ரூ.26000/- பள்ளி கட்டணமாக செலுத்தி உள்ளார் என்றால், சரிதான்.

14.09.2024 தேதியன்று ரூ.11000/– எனது மகளின் கல்விக்கு பள்ளி கட்டணமாக செலுத்தி உள்ளார் என்றால், சரிதான். 08.01.2025 தேதியன்று ரூ.10,000/– பள்ளி கட்டணமாக செலுத்தியுள்ளார் என்றால், சரிதான். எங்களது மகளின் நீட் படிப்பிற்காக பெருந்துறையில் உள்ள கிரீன் பார்க் கல்வி நிலையத்தில் எனது கணவர் ரூ.63,000/– செலுத்தினார் என்றால், சரிதான். அதில்ரூ. 50,000/– திரும்ப பெற்றுக் கொண்டார். மேற்படி கிரீன் பார்க் கல்வி நிலையத்தில் எனது மகளுக்கு ஏற்படும் புத்தக செலவு ஹாஸ்டல் செலவு தேர்வு செலவு என அனைத்தையும் எனது கணவர் தான் செலுத்தி வந்தார் என்றால், சரிதான்.

எனது மகள் மேற்படி கிரீன் பார்க் கல்வி நிலையத்தில் படிக்கவில்லை என்று கூறியதால், ஈரோடு வெள்ளாளர் கல்லூரியில் நான் சேர்த்து விட்டு எனது கணவர் அதற்குண்டான கட்டணத்தை செலுத்தினார் என்றால், சரிதான். அன்றைய தினம் கல்லூரியில் சேர்வதற்கு எனது கணவரும் அங்கு வந்திருந்தார் என்றால், சரிதான்.

25.07.2025 தேதியில் ரூ.14,280/– பேருந்து கட்டணமாகவும், 29.08.2025 தேதியில் தேர்வு கட்டணமாக ரூ.1145/– செலுத்தியுள்ளார் என்றாலும், 11.4.2025 தேதியில் ரூ.3000/–, 31.05.2025 தேதியில் ரூ. 22,000/– 17.07.2025 தேதியில் ரூ.3000/– 04.08.2025 தேதியில் ரூ.5000/– 08.12.2025 தேதியில் ரூ.3000/– 07.01.2026 தேதியில் ரூ.4000/– எனது வங்கி கணக்கிற்கு தான் அனுப்பப்பட்டது என்றால், சரிதான். ஆனால் மேற்படி பணமானது எனது மகளின் டைப்பிங் செலவு மற்றும் கல்லூரி கட்டணத்திற்காக அனுப்பப்பட்டது. 12.01.2026 தேதியன்று எனது மகளின் கல்வி கட்டணம் மட்டும் டியூசன் செலவிற்காக ரூ.22000/– செலுத்தி உள்ளார் என்றால், சரிதான். 03.02.2026 தேதியன்று ரூ.14,280/– பள்ளி பேருந்து கட்டணமாக செலுத்தி உள்ளார் என்றால், சரிதான். 25.02.2026 தேதியன்று எனது மகளின் பருவ தேர்வுக்காக ரூ.2625/– செலுத்தி உள்ளார் என்றால், சரிதான்.

இது மட்டும் இல்லாமல் எனது மகளுக்கு செல்போன் மற்றும் தங்க ஆபரணங்கள் மற்றும் மேற்படி செல்போனிற்கு மாதாமாதம் ரீசார்ஜ் செய்து வருகிறார்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 17:18:13 +0530

என்றால், சரிதான். எனது கணவர் எனது மகளுக்கு தங்கத்தோடு வாங்கி கொடுத்துள்ளார் என்றால், சரிதான். எனது மகளுக்கு பார்ப்பதில் சிரமம் இருப்பதால் அதற்கு கண்ணாடி வாங்கி கொடுத்தார் என்றால், சரிதான். ஆனால் மருத்துவ செலவுகள் நான் தான் செய்தேன். நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல் எனது கணவர் செலவுக்கு பணம் கொடுக்காமல் இருந்திருந்தால் மதுவிற்கு அடிமையாக இருந்திருந்தால் எனது கணவர் எனக்கும் எனது மகளுக்கும் செய்ய வேண்டிய அனைத்து கடமைகளும் சரிவர செய்திருக்க முடியாது என்றால், சரியல்ல.

எங்களுக்கு தேவையான அனைத்து பணிவிடைகளும் எனது கணவர் சரிவர செய்து வருகிறார் என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி எனது கணவர் எந்த உதவிகளும் எங்களுக்கு செய்யவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது கணவர் தற்போதும் எங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து வருகிறார் என்றாலும், நான் தான் அவரிடம் இருந்து வேண்டுமென்றே பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றாலும், சரியல்ல. என்னைப் பொறுத்த வரையில் நான் எனது கணவரிடம் இருந்து ஜீவனாம்சம் தொகை பெற எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள எனது மனுவில் என்னை நானே பராமரித்துக் கொள்ள முடியவில்லை என்றும் உடல் நிலை பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் எதுவும் கூறவில்லை என்றாலும், சரிதான். நான் எனது பெற்றோர் வீட்டில் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறேன் என்பதால் எனது கணவர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க தேவையில்லை என்றால், சரியல்ல. தற்போதும் எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும், நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்றால், சரிதான். இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 17:18:19 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani